2000 மார்ச் 30]

153—

விருந்தினர் விடுதி

***17173—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை தீவுத்திடலில் கூட்டுறவாளர்களுக்கு எப்பொழுது விருந்தினர் விடுதி கட்டப்படும்?

மாண்புமிகு திரு கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னையில் தீவுத் திடலுக்கெதிரில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமான பழைய கட்டடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்குத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வி.கே. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு திரு. என்.எஸ். மன்றாடியார் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது, அந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்காகவும், கூட்டுறவாளர்கள் தங்குவதற்காகவும் அது கட்டப்பட்டது. தமிழ்நாட்டினுடைய மிகச் சிறந்த கூட்டுறவாளர்களான திரு. எம். எஸ். பழனியப்ப முதலியார், திரு. சி.எஸ். இராமநாதன் செட்டியார் திரு. நடேசன், திரு. டி.என். பழனிச்சாமி கவுண்டர், திரு. மணி கவுண்டர் ஆகியோர் அங்கு வந்து தங்குவது வழக்கமாக இருந்தது. நாளடைவில் அது பழுதுபட்டு, பராமரிக்கப்படாமல் போய்விட்டது. ஆனால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு மட்டும் எழும்பூரில் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கூட்டுறவாளர்கள் வந்து தங்குவதற்கு கட்டடம் கட்டப்படவில்லை. இன்றைக்கு சென்னை நகரிலே தங்குவதற்கு ஓட்டல்களிலே அதிக வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனை, கூட்டுறவாளர்களுக்கு அளிக்கப்படுகிற T.A. D.A.-ஐ வைத்துக் கொண்டு, சமாளிக்க முடியாது. எனவே, விரைவாக சென்னை நகரிலே கூட்டுறவாளர்கள் வந்து தங்குவதற்கு எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு நவீன விருந்தினர் விடுதியைக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமான விருந்தினர் மாளிகை 1964-லேயே கட்டப்பட்டு, அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று 13-8-1996-லே சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. பின்னர் இதற்கான விண்ணப்பம் C.M.D.A. வுக்கு 17-4-1998-ல் அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் அனுப்பப்பட்டபோது, அந்த இடத்தைச் சுற்றி மாநகராட்சி, பொதுப் பணித் துறை மற்றும் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற இடத்திற்கான வரைபடத்தில் உள்ளவாறு 1964-இல் அதில் கட்டப்பட்ட கட்டடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகும். ஆனால், அதற்கான பட்டா வழங்கப்படவில்லை. இதற்கு பொதுப் பணித் துறை, அனுமதி பெறவேண்டும். பாதுகாப்புத் துறை அனுமதி பெற வேண்டுமென்று, 20-5-1998-லே அந்த விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது. இப்போது திருத்தியமைக்கப்பட்டு, வரைபடம் புதியதாக வரையப்பட்டு அந்த இடத்திற்குச் சொந்தமான 1153 சதுர மீட்டரிலே ஒரு புதிய வரைபடம் வரையப்பட்டு 15-3-2000-ல் புதிய விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு C.M.D.A.யின் அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

154—

அடுக்கு மாடி விடுகள்

***29754—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் வாழும் ஏழை மக்களுக்கு, குடிசைகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

TRUTH ALONE TRIUMPHS